சட்டதிட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாக அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, அதை ஆய்வுக்கு உட்படுத்தி, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருந்தால், அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதே கேள்வியைத்தான் கேட்க இருக்கிறார்கள். ஆகவே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் இதையே பதிலாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலிலே கேட்டு, அனைத்து கருத்துருக்களும் அரசுக்கு வந்திருந்தால் வருகின்ற கல்வியாண்டில் முன்னுரிமை அடிப்படையிலே மாண்புமிகு அம்மாவின் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

177—

தொழிற்பயிற்சி நிலையம்

***5204—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 ஏப்ரல் 26]

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, வேலூர் மாவட்டத்திற்குட்பட்டதாகும். வேலூர் மாவட்டத்தில் வேலூர், இராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம் ஆகிய 3 இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் மற்றும் மாவட்டத்தில் 25 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 5,070 மொத்த இருக்கைகளில் 996 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. எனவே, ஆம்பூர் தொகுதியின் தேவைக்கு தற்போது இயங்கி வரும் தொழிற்பயிற்சி நிலையங்களே போதுமானதாக உள்ளன. எனவே, ஆம்பூர் தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி, பேரணாம்பட்டு போன்ற பகுதிகள் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. இங்கே வேலை இல்லை என்பதைவிட வேலைக்குத் தகுந்த ஆட்கள் இல்லை என்பது தான் உண்மை. ஆக, அந்தப் பகுதியிலே தொழிற்பயிற்சி நிலையம் என்பது நிச்சயம் தேவை. அந்தப் பகுதியிலே தொழிற்பயிற்சி நிலையம் கிடையாது. வேலூரிலே இருக்கின்றது. அரக்கோணத்திலே இருக்கின்றது. ஆனால், தொழிற்சாலை நிறைந்த இந்தப் பகுதியிலே இல்லையென்றுதான் நான் கேட்டிருக்கின்றேன். ஆகவே, இந்தப் பகுதியிலே தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான இடமும் நிறையவே இருக்கின்றது. ஏறத்தாழ 15 ஏக்கர் நிலம்,* TALCO–*க்குச் சொந்தமான இடம் கட்டடத்துடன் இருக்கின்றது.* TALCO *செயல்படவில்லை. கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டடத்தைச் சீரமைத்தாலே ஒரு கல்லூரியே துவங்கி விடலாம். ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அந்த இடத்திலே ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

[2012 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் மிகக் கனிவோடு கேட்டிருக்கின்றார்கள். அவருடைய வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், ஒரகடம் ஆகிய உயர் தொழிற்பூங்காக்களில் 500–க்கும் மேற்பட்ட பெரிய, சிறிய தொழிற்சாலைகள் உள்ளன. முறையாகப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அங்கு வேலைக்குக் கிடைப்பது மிக அரிதாக உள்ளது. ஆதலால், அப்பகுதியிலே அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]